கத்தோலிக்க வாரவெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

மலர்: 97 இதழ்: 22
ஆனி 10 — 1972
பிரதி சதம் 15

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

## கத்தோலிக்கர் யாவரும் வேதபோதக வேலையிற் பங்காளர்

வேதபோதக வேலையின் முக்கியத்துவத்தைக் கத்தோலிக்கர் யாவரும் மனதில் ஆழப்பதித்துக் கொள்வதற்காக இவ்வருடம் ஐப்பசி மாதம் 22-ம் திகதி கொண்டாடப்பட இருக்கிற வேதபோதக தினத்துக்கு முன்னோடியாக பரி. தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசரால் ஒருவிசேஷ செய்தி அத்தினத்துக்கு ஐந்து மாசங்களுக்கு முன்பாகவே வெளியிடப்பட்டிருக்கிறது. தேவனது வார்த்தைகளைக்கிறீஸ்தவரல்லாதவர் மத்தியில் போதிக்கும் வேலை குருமாருக்கே விசேஷமாக இடப்பட்டிருப்பினும், அவ்வேலைக்கு உதவியாகப் பலசேவைகளும் குருமாரல்லாத பொதுநிலைமக்களினாலும் மறுதுறவிகளினாலும் செய்யப்பட வேண்டியிருப்பதால் ஒவ்வொரு கத்தோலிக்கரும் தம்மால் உவப்புடன் செய்யக்கூடிய தொண்டைத் தெரிந்தெடுத்து அதைப் பிரமாணிக்கமாகச் செய்துவர அச்செய்தியில் கேட்கப்பட்டிருக்கின்றனர். செல்வந்தர் தம்மால் கொடுக்கக்கூடிய பணஉதவியுடன் நின்றுவிடாது தமது மனதுக்கிசைந்த மறுதொண்டுகளிலும் ஈடுபடுதல் விரும்பப்பட்டுளது.

## இருபது புதுமைகளில் இஃதும் ஒன்று

அமரத்துவம் எய்திய 23-ம் அருளப்ப பாப்பானவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டமும், புனிதர்பட்டமும் அருளப்பட வேண்டுமென்று மனுப்பண்ணி உலகின் நாலுபகுதிகளிலுமிருந்து இலட்சக்கணக்கான மக்கள் வத்திக்கானுக்கு விண்ணப்பங்கள் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களில் இளைஞர்களும், முதியவர்களும், கல்விமான்களும், கல்வியறிவில்லாதவர்களும், செல்வந்தர்களும், வறிஞர்களுமான பலதிறத்தினருமே அடங்கியிருக்கின்றார்கள். இந்த விண்ணப்பங்களில் அநேகம் நம்பிக்கைக்குரிய ஆத்துமங்களினால் "அருளப்ப பாப்பானவர், உரோமாபுரி" என்று யாதும் அலங்காரமற்ற சாதாரண முகவரியுடன் அனுப்பப்பட்டிருக்கின்றன. இத்தாலிய தபால்நிலையம் வத்திக்கானுக்கு இவைகளை அனுப்பி வைக்கின்றன. வத்திக்கான் அவைகளை வண. அன்ரோனியோ காய்ரோலி சுவாமியாருக்குத் திரும்ப அனுப்பி வைக்கின்றது. இவற்றில் ஒரு பெருந்தொகையானவைகள் அருளப்பபாப்பானவர் இன்னுமே சீவந்தராக இருக்கிறார், அவர் உலகில் இன்னுமே ஊக்கமாகப் பணியாற்றி வருகிறார் என்றாற்போல் எழுதப்பட்டுள்ளன.

வண. அன்ரோனியோ காய்ரோலி சுவாமிகள் என்றால் அவர் யார்? இவர்தான் அருளப்ப பாப்பானவருக்குத் திருப்பட்டம் அருளுமாறு கேட்கும்மனுதார் அதாவது விண்ணப்பகாரர். அருளப்ப பாப்பானவர் பிறந்து வளர்ந்ததும், ஆரம்ப கல்வி பயின்றதும் பேர்காமோ மேற்றிராசனமாகும். அவருக்குத் திருப்பட்டம் அருளுவதை ஆதரித்து, உத்தரவாதமாய் இருப்பது இந்த மேற்றிராசனமே. இது சம்பந்தமாய் பேர்காமோவின் அதிமேற்றிராணியாரான கிளெமெனரே கட்டி ஆண்டகை வண. அன்ரோனியோ காய்ரோலி சுவாமிகளையே விண்ணப்பகாரராகத் தெரிவு செய்திருக்கின்றார். சுவாமிகள் பெரிய கல்விமான். உரோமன் சட்டத்திலும் கனன் சட்டத்திலும் பாண்டித்தியம் பெற்ற ஒரு பேராசிரியர். அருள்உள்ளம் படைத்தவர். சித்திரமாகச் செயலாற்றும் திறமை வாய்ந்தவர். புனிதர் பட்டம் அருளும் துறையில் பரந்த அனுபவஞானம் உடையவர். பிரஸ்தாபம்பெற்ற பிரான்சிஸ்கன் சபைக் குரவர்.

முத்திப்பேறுபெற்ற பட்டமோ புனிதர் பட்டமோ அருளப்படுமாறு மனுச்செய்து கொள்ளப்பட்டஒருவரின் சலுகையால் நடைபெற்றனவாக எடுத்தாளப்படும் புதுமைகளின் உண்மையை நிலைநாட்டி அவைகளை உறுதிப்படுத்துவது விண்ணப்பகாரரின் பெருங் கடமையாகும். ஒருவர் "முத்திப்பேறு பெற்றவர்" ஆக்கப்படுமுன் குறைந்தபட்சம் இரு புதுமைகளும், அவர் "புனிதர்" ஆக்கப்படுமுன் மேலும் இரு புதுமைகளும் தாபிக்கப்படவேண்டும்.

அவ்வாறாக அருளப்ப பாப்பானவரால் நிகழ்ந்தனவாக இதுவரை எடுத்தாளப்பட்டுள்ள ஒருபெருந்தொகையான புதுமைகள்பற்றிய முக்கியமான வைத்திய சான்றுகளைக் காய்ரோலி சுவாமிகள் மிகவும் சாவதானமாக ஆராய்ச்சிசெய்ததன் முடிவாகத் தலைத்தெரிவான இருபது புதுமைகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றிற்கு "உச்ச இருபது" எனப்பெயர் வழங்கியிருக்கின்றார். இவற்றில் ஒன்று நேப்பிள்ஸ் நகரிலே சயரோகத்தால் பீடிக்கப்பட்டிருந்த 21 வயதுடைய ஒரு கன்னியாஸ்திரி சம்பந்தப்பட்டதாகும். அவளுடைய இரைக்குடலிலே திறந்த ஒரு பெரிய புண் இருந்தது. அவள் தீராப்பிணியாளியென்று அவளைப் பரிகரித்த டக்றர்மார் அறிவித்து விட்டார்கள். அவளுடைய உயிர் போய்க்கொண்டிருந்தது. ஆனால், அவள் ஒரு குருவானவரால் அவஸ்தைப் பூசுதல் அருளப்பட்டதன் மேல் அருளப்ப பாப்பானவரைப் பார்த்து, அவர் சலுகையை இரந்து மன்றாடியதும் உடனடியாகக் குணமடைந்தாளென எடுத்துக் கூறப்படுகிறது. காய்ரோலி சுவாமிகளுக்குத் தெரிவிக்கப்பட்ட சான்று வருமாறு: நோயினால் பீடிக்கப்பட்டிருந்த கன்னியாஸ்திரியை அவள் இறந்துபோவாளென எதிர்பார்க்கப்பட்ட தினமன்று காலை 11மணிக்கு அவளுடைய அறையிலே டக்றர் ஒருவர் சந்தித்தார்.

பிற்பகல் 2மணிக்கு மற்றொரு கன்னியாஸ்திரி சொற்ப நெய்யை அவள் பருகக் கொடுத்தாள். ஆனால், அதை அவளால் உட்கொள்ள முடியாதிருந்தது. இருபது நிமிஷங்களின்பின் ஒரு கன்னியாஸ்திரி அவளுடைய புண்ணைக் கழுவிச் சுத்தஞ்செய்தாள். 2-30 மணிக்கு அந்தப்புண் முற்றாக இல்லாது மறைந்துபோய் விட்டது. அந்தப் புண்ணிருந்த தழும்பின் அடையாளம்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## உமது நாடு எழில்மிக்க நாடு என்கிறார் பரிசுத்த தந்தை

இலங்கை "சிறிலங்கா" எனும் பெயருடன் ஒரு குடியரசாகப் பிரகடனம்செய்யப்பட மூன்று தினங்களுக்கு முன் வேதபோதக அலுவல்களுக்கு உதவி கொடுக்கும் வத்திக்கான் செயற்குழுவில் அங்கம் வகிக்கும் வணக்கத்துக்குரிய மணிக் முத்துக்குமாரு சுவாமிகளுக்குப் பரிசுத்த தந்தை அளித்தபேட்டியில் எமது நாட்டின் இயற்கை அழகைப்பற்றியும் அது அடைய இருந்த புதிய நிலைமையையும் பற்றியும் அன்புடன் குறிப்பிட்டு எமது நாட்டின் முன்னேற்றத்துக்காகச் செபித்துக்கொள்ள வாக்களித்துள்ளார். வேதபோதக அலுவல்களுக்கென இவ்வருடம் 330,000,000 ரூபா பெறுமதியான பணம் உலக தேசம் முழுவதுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. சென்ற சில வருடங்களாக வேதபோதக கருமங்களில் ஏற்பட்டிருக்கும் மந்தநிலை அகற்றப்படவேண்டிய அவசியத்தை வேதபோதக கருமப்பிரிவின் தலைவராகிய கருதினல் ரொசி அடிகளார் எடுத்துக்காட்டியிருக்கின்றார்.

## 80வயதில் குருவானார்

இது சாதாரணமாக நடக்கும் விஷயமல்ல, எனினும் அண்மையில் ஐக்கிய அமெரிக்க தேசத்தில் டிற்ரோயிற் நகரத்தில் 80வயது நிரம்பிய ஒரு பிரபல வியாபாரியார் குரு அபிஷேகம் செய்யப்பட்டார். இவரது பெயர் மைக்கல் மேர்பி என்பதே. தோட்ட அபிவிருத்திச் சாதன உற்பத்திச்சாலை ஒன்றின் உரிமையாளராயிருந்த மைக்கல் மேர்பி, இவ்வுலக செல்வங்களின் நிரந்தரமற்ற தன்மையை உணரப் பெற்றதும், அவற்றை ஒதுக்கிவைத்து, பரலோக செல்வத்தை நாடிக் குருவுக்குரிய படிப்புகளை முடித்துக் கொண்டு தமது பிரிவு மேற்றிராணியார் வால்ரேர்ஸ் அடிகளால் அபிஷேகம் செய்யப்பட்டார்.

## ஒரு நாச வேலை

உலகிலே மிகப் பிரசித்தி பெற்ற கலைப் பொருள்களில் ஒன்றென மதிக்கப்படுகிறது "பியெற்ரு" என அழைக்கப்படுகின்ற தேவதாயார் திருச்சிலையாகும். தமது திருக்குமாரன் சிலுவையிலிருந்து இறக்கப்பட்டு அவரதுமடியில் இடப்பட்டிருந்த சோகம் நிறைந்த பான்மையில் உயர்வரிப்பளிங்கில் செதுக்கப்பட்டிருக்கும் இச்சிலை வத்திக்கான் காட்சிப் பொருட்களில் அரும் பெரும் திரவியம். சென்றமாதம் ஹங்கேரிய தேச இளைஞன் ஒருவன் திடீரென அது வைக்கப்பட்டிருக்கும் பீடத்தில் பாய்ந்து ஏறி; தன்கையிலுள்ள இரும்புச் சம்மட்டியால் தேவதாயாரின் திருமுகப் பக்கத்தில் ஓங்கியடித்து பலத்த சிதைவுகளை ஏற்படுத்தி விட்டான்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## ஐரோப்பிய கன்னியர் மடங்களுக்கு ஏகும் இந்திய பெண்களுக்கு புதுவிதிகள்

1970-ம் வருடம் இந்திய நாட்டிலிருந்து ஐரோப்பிய கன்னியர் மடங்களுக்கு இளம்பெண்கள் தப்பான முறையில் அழைத்துச் செல்லப்பட்டு அங்கே அநீதியான முறையில் நடத்தப்படுகின்றனர் என்ற அபாண்டமான குற்றச்சாட்டுகள் இந்திய ஆட்சிமன்றத்திலே தன்னும் எழுப்பப்பட்டதையும், அதன் பயனாக ஆட்சிமன்றம் நடத்திய விசாரணையில் அக்குற்றச்சாட்டுகளில் உண்மையில்லையென இந்திய வெளிவிவகார மந்திரியார் வெளிப்படுத்தியதையும் உலகம் அறியுமன்றோ? எனினும் இந்திய திருச்சபை அதிகாரிகள் இதுபற்றி மேலும் எவரும் கொள்ளக்கூடிய ஐயுறவுகளை நீக்க சில புது விதிகளை நிறுவியிருக்கின்றனர். ஐரோப்பிய கன்னியர்மடங்களுக்கு தேவதொண்டுக்குரிய பணிகளைப் பயிலப்போக விரும்பும் பெண்கள் 18வயதுக்கு மேற்பட்டவராயும், கல்லூரி உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றவராயும், பெற்றோரின் அனுமதிபெற்றவராயுமிருக்க வேண்டும். பிறதேசமடங்களுக்கு அனுப்பிவைக்கும் பொறுப்பு தனிப்பட்ட எக்குருவானவர் கையிலுமில்லாது தேசிய ஆயர்சபையினரின் பொறுப்பிலேயே விடப்பட்டிருக்கின்றது.

## புனித போராட்டம்

கல்வி சம்பந்தமாக ஆங்கில நாட்டில் அண்மையில் நடைபெற்ற கத்தோலிக்கர் கூட்டத்தில் ஆங்கில நாட்டுக் கருதினல் ஹீனன் அடிகளார் திருச்சபை சரித்திரத்திலே புனித தலங்களுக்காக ஈடுபட்ட யுத்தங்கள் பல உண்டென்றும் இக்காலத்திலும் அது இரு புனித தலங்களுக்காகப் போராடி வருகிறதென்றும் அவை இரண்டும் இல்லமும் கர்ப்பமும் எனவும் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நம் இளைஞர்களுக்காக நாம் எப்போதும் வருங்காலத்தை உருவாக்க முடியாது. ஆனால் நமது இளைஞர்களை வருங்காலத்திற்கு ஏற்றவர்களாக உருவாக்க முடியும். — ஓர் அறிஞர்

*சத்தியவேத பாதுகாவலன்*

# அன்பின் சின்னம்

ஒவ்வொரு கருத்துக்காக சிற்சில மாதங்களை ஒதுக்கி வைப்பதன் காரணம் அம்மாதத்தில் அக்கருத்தை நினைவுகூரத் தூண்டுவதேயாகும். அதாவது அம்மாதத்தில் நாம் ஒரு குறித்த கருத்தைப்பற்றி அதிகமாகச் சிந்தித்து, தியானித்துச் செயலாற்றவேண்டும் என்பதேயாகும். இம்மாதம் அன்பின் சின்னமாகிய திருஇருதயத்தைப் பற்றித் தியானித்து, நாம் அதன்மூலம் உணர்ந்து கொள்வனவற்றையும், நாம் செய்யவேண்டுவனவற்றையும் அறிய முயல்வோமாக.

திருஇருதயப்பக்தி இடைக்காலத்தில் ஏற்பட்டதுதான். ஆதித் திருச்சபை இப்பக்தியை அனுசரியாமலே வளர்ச்சியடைந்து, தன் மீட்புப் பணியையும் புரிந்தது. ஆனால் இருதயம் என்ற சின்னத்தை அவர்கள் குறிப்பிடவில்லையே தவிர, அச்சின்னத்தின் உட்பொருளை அவர்கள் உணராதவர்கள் அல்ல. நாம் திருஇருதயத்தை எமதாண்டவர் மனுக்குலத்தின்மேல் கொண்ட அன்பின் சின்னமாகக் கருதி அதை வணங்கி வருகிறோம். இந்த அன்பு இல்லாமல் திருச்சபையே, ஏன் உலகமே உருவாகியிருக்க முடியாது, நிலைத்திருக்கவும் முடியாது.

எமது விசுவாசவாழ்வுக்குச் சின்னங்கள் அத்தியாவசியமானவை அல்லஎன்பது உண்மை. ஆனால் நாம் அரூபிகளல்ல; உடலும் உணர்வும்உள்ள மனிதர். ஆகவே வெளி அடையாளங்கள் எமது உணர்ச்சிகளை வெளியிடுவதோடு, எமது இலட்சியங்களையும் உருவாக்குகின்றன. ஆகவேதான் திருஇருதயப்பக்தி இரட்சணியத்துக்கு இன்றியமையாததாகினும் இறைவனது பெருந்தன்மையால் எமக்கு அருளப்பட்ட ஒரு மாபெரும் அருட்சாதனமாகும். அதை அலட்சியம் செய்வோர் இறைவனுக்கும் தமக்குமிடையில் ஏற்படக்கூடிய நெருக்கமான உறவை இழக்கநேரிடும்.

வத்திக்கான் திருச்சங்கஏடுகளில் திருஇருதயப் பக்தியைக் குறித்து எதுவும் பேசப்படவில்லையாயினும், இப்பக்திக்கு அடிப்படையாயுள்ள அனைத்தையும் போதிக்கின்றது. சுதனாகிய கிறிஸ்துவின்மூலம் புலப்படும் இறைவனின் அன்பை அங்குநாம் காண்கிறோம். எமது பரிசுத்த பாப்பரசரும் இப்பக்தியின் பொருத்தத்தையும் அவசியத்தையும் பன்முறை எடுத்துக் கூறியிருக்கின்றார்.

மனித உருவெடுத்த வார்த்தையானவரின் நித்திய அன்புக்குத் திருஇருதயம் ஒருசிறந்த சின்னமாயிருக்கின்றது. அதன்மட்டில் செலுத்தப்படும் பக்தியும் அன்புப் பக்தியாகும். உண்மையான அன்பு உணர்ச்சியின்பாற் பட்டதல்ல. உள்ளத்தில் ஏற்பட்ட ஆழ்ந்த பற்றுதலினால் ஒரு குறிப்பிட்ட முறையில் விரும்பிச் செயலாற்றுவதாகும். திருஇருதயத்தைப் பொறுத்தமட்டில் எமது முதலாவது செயல் அர்ப்பணமாகும். அதாவது எல்லாக் காரியங்களிலும் கிறிஸ்துவுக்கே முதலிடம் அளிப்பது. எமது நாளாந்த வாழ்வில் மற்றெல்லாக் காரியங்களுக்கும் கிறிஸ்துவுக்கு அடுத்தபடியாகத்தான் முக்கியத்துவமளிக்க வேண்டும்.

எமது அடுத்தசெயல் பரிகாரம். கிறிஸ்துநாதருக்கு மக்கள் அளிக்கும் பிரதியன்பு மிகக் குறைவானது என்பது வெள்ளிடைமலை. அன்பைச் செலுத்திவிட்டு அன்பைப் பெறுமலிருப்பது எவ்வளவு கசப்பானது என்பதை எமது மனித அனுபவங்கள்மூலம் அறிவோம். கிறிஸ்துவை நேசிப்பவர்கள் அவரை நேசியாதவர்களுடைய அலட்சியத்துக்கு ஈடாக அன்புச் செயல்களைப் புரிவதே பரிகாரம். நாம் பிறரைவிட மேலானவர்கள்என்ற தற்பெருமையோடு அல்ல கிறிஸ்துவின் அன்பின்முன் எம்மைத் தாழ்த்தியே பரிகாரம் செய்யவேண்டும்.

அர்ப்பணத்திலும் பரிகாரத்திலுமே திருஇருதயப்பக்தி அடங்கும். இம்மாதத்தில் எமது சிந்தனை இவை இரண்டையும் மையமாகக் கொண்டிருக்கட்டும்.

> பலவீனர்களின் பாதையில் தடையாக நின்ற கருங்கல் பாறை பலசாலியின் பாதையில் படிக்கட்டாக அமைகிறது. — ஓர் அறிஞர்

# "தேவ மன்னா"

— ஆசிரியர் : எவ். எஸ். சி.

நமது திவ்விய இரட்சகர் அன்புருவெடுத்து அவனியில் உதித்துச் சிலுவையிற் பலியாகி நம்மை மீட்டு இரட்சித்தார். இத்தகைய அணைகடந்த அன்புச் செயலாற் பாவ அடிமைத் தனத்தினின்று நம்மை மீட்டது போதாமல், அற்ப புழுக்களாகிய எங்களுக்குத் தம்முடைய திருச் சரீரத்தையும், திருஇரத்தத்தையும் நித்திய வாழ்வளிக்கும் ஞான உணவாகவும் தந்தருளினார். ஆதலால் நாம் அவரது அன்புச் செயல்களை நினைந்து இறைவனைப் புகழ்ந்து அகமகிழ்வோம்.

இறைமகனாய்வந்த இரட்சகர், மனிதரைமீட்கச் சிலுவையிற் பாடுபடுமுன்னர் முதல் நாளன்று அப்ப இரசக்குணங்களுள் அவ்வுன்னத பலியை மறைத்துத் தமது பரமபிதாவுக்கு ஒப்புக்கொடுத்தார். பெரியவியாழக்கிழமையன்று இரத்தம் சிந்தாமல் அவர் தமது பிதாவுக்கு ஒப்புக்கொடுத்த பலியைப் பெரிய வெள்ளிக்கிழமை தமது திரு இரத்தத்தைச் சிந்தி நிறைவேற்றினார்.

திவ்விய நற்கருணைப்பலி சிலுவைப்பலியோடு ஒன்றாகவும், அதை நினைவூட்டுவதாகவும் இருக்கிறதினாலே, திவ்விய பூசைப்பலியை நமது இரட்சகராகிய யேசு தாம் பட்ட திருப்பாடுகளின் நினைவாக நிறைவேற்றும் வண்ணம் கற்பித்தருளினார். ஆச்சரியம் நிறைந்த தேவநற்கருணையெனும் திருவருட் சாதனத்திலே இறைமகன் யேசு தமது திருப்பாடுகளின் ஞாபகத்தை வைத்தருளினார். நாமும் அவர் நமக்களித்த இரட்சணியத்தின் பலனை அடைவதற்கு, அந்த ஆச்சரியமான தேவ மன்னாவின் தெய்வீக இரகசியங்களை அறிந்து அவைகளை என்றும் நினைவிற்கொண்டு திவ்விய நற்கருணையை ஆராதிப்போம்.

கல்வாரிமலையில்யேசு அனைவரது மீட்புக்காகவும் அளித்த அன்பின் பலியைத் திவ்விய பூசைப்பலி பீடமும் தொடர்ந்து நடப்பித்துத் திவ்விய கர்த்தருடைய திருமரணத்தைக் காட்டுகிறது. யேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இராத்திரியிலே அப்பத்தை எடுத்து நன்றியறிந்ததோத்திரஞ் செய்து அதனைப்பிட்டு, "இதை வாங்கிப் புசியுங்கள்; இது உங்களுக்காகக் கையளிக்கப்படும் என் சரீரமாய் இருக்கின்றது; எனது ஞாபகமாக இதனைச் செய்யுங்கள்" என்றும் அதன் பிரகாரம் அசனம் பண்ணின பின்பு அவர் பாத்திரத்தையும் எடுத்து, "இந்தப் பாத்திரம் எனது இரத்தத்தின் புதிய உடன்படிக்கையாய் இருக்கின்றது; இதை நீங்கள் பானம்பண்ணும் போதெல்லாம் என் ஞாபகமாகச் செய்யுங்கள்" என்றார். "ஆதலால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து இந்தப் பாத்திரத்திற் பானம்பண்ணும் போதெல்லாம் ஆண்டவர் வருமளவும் அவருடைய மரணத்தை அறிவிப்பீர்கள்" என்று புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்திற் கூறியிருக்கின்றார்.

## பூசை வழிகாட்டி
### ஆனி—1972.

**12.** திங்கள் : நாட்பூசை [ப]
**வாசகங்கள் :** 1அர. 17 : 1—7
மத். 5 : 1—12

**13.** செவ்வாய் : புனித அந்தோனியார் [வெ]
**வாசகங்கள் :** 1அர. 17 : 7—16
மத். 5 : 13—16

**14.** புதன் : நாட்பூசை [ப]
**வாசகங்கள் :** 1அர. 18 : 20—39
மத். 5 : 17—19

**15.** வியாழன். நாட்பூசை [ப]
**வாசகங்கள் :** 1அர. 18 : 41—46
மத். 5 : 20—26

**16.** வெள்ளி : நாட்பூசை [ப]
**வாசகங்கள் :** 1அர. 19 : 9, 11—16
மத். 5 : 27—32

**17.** சனி : நாட்பூசை [ப]
**வாசகங்கள் :** 1அர. 19 : 19—21
மத். 5 : 33—37

**18.** ஞாயிறு : ஆண்டின் 11ஆம் ஞா. [ப]
**வாசகங்கள் :** யாத். 19 : 2—6
உரோ. 5 : 6—11, மத். 9 : 36—10 : 8

தேவநற்கருணை பரலோக வாழ்வை நாம் அடைவதற்கு நமக்குப் பெலத்தையளிக்கும் பாஸ்காவாக இருக்கிறது. யேசு பூங்காவனத்தில் இரட்சணிய அலுவலை ஆரம்பிக்குமுன்னர் தமது அப்போஸ்தலர்களோடு பாஸ்காவை அருந்தினார். நாமும் பரலோகத்திற்குரிய புண்ணியக் கருமங்களைப் புரிந்து இரட்சணியத்தை அடைவதற்குத் தேவநற்கருணையாகிய பாஸ்காவை அருந்துதல் வேண்டும்,

நமது இரட்சகராகிய யேசு தேவநற்கருணை ஏற்படுத்திய நினைவை நாமும் நன்றியறிதலோடு கொண்டாடி மகிழ்வோம். சம்மனசுகளின் அப்பம் எமது ஆன்மாவின் ஞான உணவாயிற்று. இஃது உண்மையாதலின் இந்த உத்தம திவ்விய போசனத்தை என்றென்றும் புனிதமாய் இருந்து அருந்துவோம். யேசு நமது மீட்பர்; நல்ல ஆயன்; அவர் இவ்வுலகில் நம்மை மேய்த்து உணவளித்து மேலுலகிற் சீவியரின் கூட்டத்தில் நம்மைச் சேர்த்தருளுமாறு அவரைத் தாழ்மையுடன் பணிந்துவேண்டுவோம்.

யேசு யூதர்களை நோக்கி: "என் மாமிசம் மெய்யாகவே போசனமும், என் இரத்தம் மெய்யாகவே பானமுமாய் இருக்கின்றது. என் மாமிசத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னில் வசிக்கிறான்; நான் அவனில் வசிக்கிறேன்; சீவியராகிய பிதா என்னை அனுப்பியதுபோலவும், நான் பிதாவினால் சீவிக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னால் சீவிப்பான். பரலோகத்திலிருந்து இறங்கின அப்பம் இதுவே. இதுஉங்கள் பிதாக்கள் மன்னாவைப் புசித்தது போலல்ல; அவர்கள் மரித்தார்கள்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்" என்று திருவுளம் பற்றினார். (அரு. 6 : 56, 59) ஆதலால் வாழ்வளிக்கும் வரந்தரும் வானுலகில் இருந்து இறங்கிவந்த சீவிய அப்பத்தையே நமது நித்திய வாழ்வுக்குப் பெலமளிக்கும் ஞானப் போசனமென அறிந்து நமது ஆன்ம வளர்ச்சிக்காக அதனை இடையறாது அருந்துதல்வேண்டும்.

"எவனாகிலும் இந்த அப்பத்தை அபாத்திரமாய்ப்புசிப்பானாகில், அல்லது கர்த்தருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுவானாகில், அவன் ஆண்டவருடைய சரீரத்தின் மட்டிலும், இரத்தத்தின் மட்டிலும் குற்றவாளியாவான்" என்று புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதியநிருபத்தில் கூறியிருக்கின்றார். ஆதலாற் தகுந்தவிதமாய் நம்மை ஆயத்தம்செய்து நல்ல பாவசங்கீர்த்தனத்தினால்நாம்

(மறுபக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்து இளைஞர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

செபம், தபம், அப்போஸ்தல வாழ்வு நடாத்தி இறைவனோடு ஒன்றித்து வாழ ஆர்வமும், தாராள குணமும் உள்ள இளைஞர்கள் அழைக்கப்படுகிறார்கள்.

எதற்கு?

**"செபமாலைமாதா துறவற சபைக்கு"**

❋ இதில் குருமார், சகோதரர்கள் உண்டு.

❋ குருமாராக வரவிரும்புவோர் எஸ். எஸ். சி தேர்ச்சிபெற்றிருக்க வேண்டும்.

இதைப்பற்றி அறிய விரும்புவோர் எழுதலாம், அல்லது நேரில்வந்து சந்தித்து முடிவு செய்யலாம்.

* * *

தொடர்பு கொள்ளும் முகவரி:

**வண. முதல்வர் சுவாமிகள்,**
செபமாலைத்தாசர் ஆசிரமம்,
தோலகட்டி,
வசாவிளான்.

**பங்குக் குரவர்,**
நற்கருணை நடுநிலையம்,
புனித புவானியார் ஆலயம்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


# இணை இதற்கெதுவோ!

எஸ். எம். ஜே.

இறை நம்பிக்கையுள்ள மக்கள் அனைவரும் கடவுளை வழிபடுகின்றனர். வழிபாட்டு முறைகள் இடத்துக்கிடம், சமயத்துக்குச் சமயம் வேறுபட்டிருக்கின்றன. சமய ஆசாரங்கள் நாட்டுக்குநாடு மாறுபாடுடையதாயினும் உலகிலுள்ள சமயங்களில் பெரும்பாலானவை பலியையே தம் வழிபாட்டின் மையமாகக் கொண்டுள்ளன. நரபலி, தகனப்பலி, மிருகப்பலி என்று பலவாறான பலிகள் உள.

நம் திருமறையில் பழையேற்பாட்டு நூல்களில் இருந்து பலியின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். இறைவன் தாமே பலியின் வகையும், பலிசெலுத்தும் முறையும், பலி செலுத்துபவரின் இலட்சணங்களும், பலி செலுத்தும்பொழுது கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்குகளும் அனுட்டானங்களும் என்ன தன்மை உடையதாய் இருக்கவேண்டும் என்பதை வெளிப்படுத்தியுள்ளார். இறைவன் பலியை விரும்பினார். அவரே பலிசெலுத்தும் மக்கள் தலைவர்களை ஏற்படுத்திக் குருகுலத்தைப் பெயரிட்டு அழைத்தார்.

காயின் செலுத்திய பலி, ஆபேல் செலுத்தியபலி, நோவேயின் நன்றிப்பலி, ஆபிரகாமின்பலி, ஆரோனின்பலி, மெல்கிசெதேத்தின்பலி என்றெல்லாம் பழையேற்பாட்டில் பல முக்கியத்துவம் வாய்ந்த பலிகளைப்பற்றிய செய்திகளை வாசிக்கின்றோம். இப்பலிகள் யாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல பலியின் கொடுமுடியாக அமைந்ததே சிலுவைப் பலி. இறைமகன் யேசு உலக மீட்புக்காக தம்மையே உயிர்ப்பலியாக்கினார். இதுவே புதியேற்பாட்டின்பலி. இப்பலிக்கு ஈடும் இணையுமான பலி அன்றும் இன்றும் என்றுமே இருக்கப் போவதில்லை. மகத்துவமும், தனித்துவமும், மாண்பும் மிக்க இப்பலிக்கு நிகரான வேறுபலி எதுவும் இல்லை.

அதை என்றும் நினைவுகூர்ந்து உலகுள்ளளவும் தமது ஞாபகமாகச் செய்துவரும்படி பெரிய வியாழக்கிழமை ஏற்படுத்தியதே பூசைப்பலியாகும். அவரது சீடர்களுக்கும் அவர்களைத் தொடர்ந்துவரும் குருமாரினருக்கும் இந்த மகத்துவப்பலியை நிறைவேற்றும் அதிகாரத்தை அளித்துச் சென்றார். உலகின் எத்திக்கிலும் எழுவான் தொடக்கம் படுவான்வரை ஓயாது இப்பலி நிறைவேற்றப்பட்டே வருகின்றது. இறைமகன் உடலை தன் அபிஷேகம் செய்யப்பட்ட கரங்களால் தொட்டு ஏந்தவும், இறைமக்களுக்கு அதைப்பகிர்ந்து அளிக்கவும் பாக்கியம்பெற்ற குருவின் மகத்துவத்துக்கு ஒப்புமை எதுவுமே இல்லை.

இத்தகு பெருமைக்கு உரிய குருவின் வியத்தகு மகத்துவத்தைப்பற்றி தேவ அன்னை வெளிப்படுத்தியதாவது: "ஒரு குருவும், தேவதூதனும் ஓரே நேரத்தில் என்எதிரே வருவார்களாயின் நான் முதலில் குருவுக்கே சங்கையும் மரியாதையும் செலுத்துவேன்" என்று புனிதை மேரி அக்றெடாவுக்கு ஒரு காட்சியில் தேவ அன்னை தெரிவித்தார். மேலும் தொடர்ந்து தேவதாயார் தெரிவித்ததாவது, "குரு மற்றோர் கிறிஸ்து; அப்பத்தையும் இரசத்தையும் கிறிஸ்துவின் சரீரமாகவும், இரத்தமாகவும் மாற்றும் வல்லமை குருவைத்தவிர எவருக்குமே இல்லை. தூதராலும் முடியாது. அதிதூதராலும் ஆகாது. பாவத்தை மன்னிக்கும் அதிகாரமும் தேவதூதனுக்கில்லை. எல்லாவல்லமையும், ஆற்றலும் அருட்கொடைகளும், சவுந்தரியமும், அறிவும், பரிசுத்தமும் நிறைந்தவர்கள் தேவதூதர்கள், ஆயினும் இறைவன் குருமாருக்களித்த இப்பெருங்கொடையை தூதர்களுக்களிக்கவில்லை. உண்மையாகவே குருவின் இவ்அதிகாரம் அளப்பரியது; இணையற்றது. அவருக்கு இறைவன் அளித்த இவ்வல்லமையும் கொடைத்திறனும் மகத்துவமானது" என்று விளக்கினார் தேவ அன்னை.

ஆர்ஸ் நகரப்புனிதர் என்று அழைக்கப்படும் புனிதஜோண் வியான்னி குருத்துவத்தின் மகத்துவத்தை அதிகமாக எடுத்துரைத்துள்ளார். அவர் கூறியுள்ளதாவது: "குருத்துவம் இல்லாவிடில் இவ்வுலகில் கடவுள் நமக்கருளும கொடைகள் யாவும் வீண்—பயன் அற்றது. பொன்நிறைந்த வீட்டைப் பூட்டி வைத்திருந்தால் என்னபயன் நித்திய உலகின் சம்பத்துக்களுக்கு திறவுகோல் குருவிடமே உண்டு. அவரே மோட்சவாசலைத் திறந்துவைப்பவர்; அவரே கடவுளின் செல்வம், கடவுள் அருளைப் பகிர்ந்தளிக்கும் கருவியும் அவரே" மேலும் அப்புனிதர் கூறுவதாவது; "குரு தனக்காக குருத்துவத்தைப் பெறவில்லை; தனக்குத்தானே பாவமன்னிப்பு அளிப்பதில்லை. தேவதிரவிய அனுமானங்கள் என்ற அருட்சாதனங்களைத் தனக்குத்தானே அருளுவதில்லை; தனக்குத்தானே குருவாய் இருப்பதில்லை; ஆனால், உங்கள் நன்மைக்காகவே குருவாய் இருக்கிறார்."

"எமக்கு குரு இல்லாவிடில், தேவநற்கருணையில் யேசுவை அனுபவிக்கும்பாக்கியத்தை இழந்து விடுவோம். நற்கருணைப் பேழையில் கிறிஸ்துவை வைப்பவர் யார்? குரு அல்லவா. ஞானஸ்நானத்தினால் எமது ஆன்மாவை திருச்சபையில் சேர்த்தது யார்? வாழ்க்கைப் பயணத்திலே எமது ஆன்மாவுக்குப் பலமளித்து அதற்கு ஊட்டமளித்து திடனளிப்பது யார்? அதுவும் குருவே. எமது ஆன்மாவுக்கு அன்னையைப்போல் இருந்து அதைப் போஷித்து வருகிறார். தாய் தன்சேய்க்கு அமுதூட்டி வளர்ப்பதுபோல "இதை வாங்கி உண்ணுங்கள். இது எங்கள் ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்துவின் சரீரம். இது உங்களை வழிநடத்தி நித்திய வாழ்வுக்கு அழைத்துச் செல்லுவதாக" என்று குரு நமக்குக்கூறி நம்மைத் தெய்வீக உணவினால் ஊட்டமளித்து வளர்க்கிறாரன்றோ".

(தொடரும்.)

# ஒரு நிமிடம்

— ஜே. என்.

ஒரு நாளில் நாம் ஒரு நிமிடமாவது சிந்திக்கவேண்டும். அதுவும் ஒரு நிமிடத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். ஒரு நிமிடம் முடியுமுன்னே இவ்வுலகில் நடைபெறும் நிகழ்ச்சிகள் எண்ணற்றவை. கருத்தடைமலிந்து கிடக்கும் இந்நாட்களில்கூட, பிறக்கும் குழந்தைகள் ஆயிரம்! ஆயிரம்!! அதே நேரத்திலே வாழ்க்கை என்ற நாடகத்தின் இறுதிக் கட்டத்திலே வந்து உயிரை விட ஊசலாடிக் கொண்டிருக்கும் மக்கள் தொகை கணக்கிலடங்கா. இரண்டு பஸ்வண்டிகள் ஒன்றையொன்று எதிர்நோக்கி விரைவாக ஓடிவருகின்றன. கண்மூடி முளிக்குமுன்னே ஒன்றோடு ஒன்று மோதுண்டு பிரயாணிகள் பலத்தகாயமடைகின்றனர். ஒரு நிமிடமாவதற்குமுன் ஒரு சிலர் இறந்தும் விடுகின்றனர். உதைபந்தாட்டப் போட்டியொன்று முடிவடைய இன்னும் ஒரு நிமிடம்தான் இருக்கின்றது. இரு குழுவினரும் மும்முரமாக விளையாடுகின்றனர். ஒரு குழுவினர் வெற்றியை எய்தினர். அதுவும் கடைசியாய்க் கிடைத்த ஒரு நிமிடத்தில்தான்.

கல்வி கற்கவேண்டிய மாணவன் தன் கடமையை மறந்து கனவு காண்கின்றான். பரீட்சை வந்ததும் தன் பாடப்புத்தகத்தைத் தேடி அலைகின்றான். கை நடுங்க கால் நடுங்க தன் வினாக்களுக்கு விடை எழுதுகின்றான். இரண்டு மணிநேரம் அந்த இடத்தில் இருந்தே ஆக வேண்டும். இனி எழுதுவது என்னதென்று அறியாது திகைத்திருக்கின்றான். நேரமும்வந்து முடியுதில்லையே என்று முறுமுறுக்கின்றான். இவனுக்கு ஒரு நிமிடம் ஒரு மணி நேரம்போல் தோன்றுவதில் வியப்பு ஒன்றுமில்லை.

நண்பர்கள் இருவர் கூடிப் பேசுகின்றனர். பொழுதும் இருட்டி விட்டது. பிரியும் நேரமும் வந்துவிட்டது. காலம் போவது இவர்களுக்குத் தெரியவில்லை. இவ்வித சூழ்நிலையில் ஒரு மணிநேரம் ஒரு நிமிடமாவதில் ஆச்சரியமில்லை. இவ்வாறு ஒரு நிமிடம் ஒரு மணியாவதும், ஒரு மணிநேரம் ஒரு நிமிடமாவதும் மக்களின் மனமாற்றத்திலே தங்கியிருக்கின்றது.

அவசரமாக ஒரு வேலையைச் செய்து முடிக்க ஒரு அலுவலகத்திற்குச் சென்றால்அங்கே "Just a minute" அல்லது "ஒரு நிமிடம் பொறுத்திருங்கள்" என்று கூறுவார்கள். ஆனால், அந்த ஒரு நிமிடம் எத்தனை மணிக் கணக்கில் முடியும் என்பது கடவுளுக்குத்தான் தெரியும்.

எனவே பழக்கம் எதுவாயிருந்தாலும் நாங்கள் குறித்த நேரத்திலே ஓர் இடத்தைப் போய்ச் சேரவும், குறிப்பிட்ட வேலையைச் செய்தும் முடிக்கவும் முயலவேண்டும். ஒவ்வொரு நிமிடமும் கடவுளால் அளிக்கப்படும் அருளாக இருக்கின்றது. ஒரு நிமிடத்தில் நாம் செய்யும் திட்டங்களும், தீர்மானங்களும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு பயனளிக்க வல்லது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆகவே சிந்தித்து செயலாற்றுங்கள்.

## தேவ மன்னா

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

புனிதமடைந்து பரிபக்குவ நிலையெய்திப் பயபக்தியுடனும், மேரை மரியாதையுடனும் தேவநற்கருணைத் திருவிருந்தை அருந்துதல் வேண்டும். இவ்வுலகில் வாழ்ந்துவரும்நாம் நமது நித்தியவாழ்வின் நன்மையை அடைதற்பொருட்டுத் தேவநற்கருணையை அருந்துவதினால் தேவத்துவத்தின் சதா நித்தியசுகிப்பை நிறையப்பெற்றுக் கொள்வதற்கு இறைவனை அனுதினமும் இரந்து வேண்டுவோம்.

## இருபது புதுமைகளில் ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

தானும் காணப்படவில்லை. குணமடைந்த அந்தக் கன்னியாஸ்திரி நோய்வாய்ப் பட்டிருந்த தனது படுக்கையின் மணியை அடித்தாள். தனது அழைப்பின்பேரில் அங்கு ஓடிவந்த கன்னியாஸ்திரியை நோக்கி: "பாருங்கள், நான் சுகமடைந்திருக்கிறேன்" என்று அவள் பகர்ந்தாள். தங்கள் சிற்றாலயத்தில் கூடியிருந்து அவளுக்காகச் செபஞ்செய்து கொண்டிருந்த ஏனைய கன்னியாஸ்திரிகளும் அவள்இருந்த அறைக்கு விரைந்து சென்றார்கள். அவளுக்கு ஏதோ அறிவு தடுமாறிவிட்டதென்றுதான் அவர்கள் நினைத்தார்கள். ஆனால், அவளோ "நான் சௌக்கியமாய் இருக்கிறேன்" என்று அழுத்தமாகக் கூறிநின்றாள். "தயவுசெய்து எனக்குச் சாப்பாட்டை ஏதும் தாருங்கள்" என்று அவர்களைக் கேட்டாள். உடனே டக்றர்ஒருவர் அழைக்கப்பட்டுவந்து பரிசோதித்துவிட்டு அவளில் பிழைபாடு எதனையும் கண்டுகொள்ள முடியாதவரானார்.

வைத்திய நிபுணர்கள் நடத்திய பரிசோதனையில் அவள் சௌக்கியமடைந்தமைக்கு வைத்திய அன்றேல் இயற்கை சம்பந்தமான காரணம் எதுவுமில்லையென்பது ஸ்திரப்படுத்தப்பட்டது. அதனால் சுபாவத்திற்கு மாறானதென்பது நிலைநாட்டப்பட்டது. எழுத்து மூலம் தரப்பட்டுள்ள இச்சான்றும் புனிதர்பட்டம் அருளுவதற்கான விசாரணை நடத்தும் திருச்சங்கத்தின்முன் சமர்ப்பிக்கப் படவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதர் வின்செனற் டி போல் தருமசபை
## புனிதர் சூசையப்பர் பந்தி யாழ்ப்பாணம்
## 1971-ம் ஆண்டுக்கான
## 64-வது வருடாந்த அறிக்கை

புனிதர் சூசையப்பர் பந்தியின் 1971ஆம் ஆண்டுக்கான சேவை அறிக்கையையும் வரவு செலவுக் கணக்கையும் எமது ஞான அதிகாரிகள், மேற்சங்க உறுப்பினர், சகோதர பந்தியினருக்கும்; உபகாரிகள், அபிமானிகள் ஆகிய யாவருக்கும் மிகுந்த பணிவன்புடன் சமர்ப்பிக்க விழைவதோடு, கடந்த நான்கு ஆண்டுகளாக எமது அறிக்கையைப் பிரசுரியாதிருந்தமைக்காக மன்னிப்பையும் கோருகிறோம்.

### அங்கத்தவர்களும் கூட்டங்களும் :

கடந்த வருடத்திலே தொண்டாற்றிய காரிய அங்கத்தவர்கள் தொகை பதினொன்று. நிகழ்ந்த நாற்பத்தேழு கூட்டங்களுக்குச் சராசரி எட்டுப்பேர் சமுகமளித்தனர். கூட்டங்களின்போது எமது வறியோரின் வைதீக-லெளகிக நலன்களை மேம்படுத்தற்கான வழிவகைகள் விரிவாக ஆராய்ந்து செயற்படுத்தப்பட்டன.

காரிய அங்கத்தவர்களின் தொகையை அவதானிப்பவர்களுக்கு அத்தொகை கடந்த காலங்களிலும் பார்க்க ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்காகக் குறைந்திருப்பது தெள்ளிதிற் புலப்படும். தள்ளாப் பராயம் எய்தியமையின் சில அங்கத்தவர்கள் தங்கடமையினின்றும் இளைப்பாறினர். சிலர் உத்தியோகமாற்றம் முதலிய காரணங்களினால் வேற்றூர்களுக்கேகினர். வேறு சிலர் வசதியின்மை போன்ற காரணங்களைக் கூறிக்கொண்டு சபையினின்றும் நீங்கினர். அன்றியும் மிகுந்த ஊக்கத்துடன் சேவை புரிந்து யாவருக்கும் முன்மாதிரிகையாக விளங்கி எல்லோராலும் நன்கு மதித்து நேசிக்கப்பட்டவர்களான சகோதரர்கள் எஸ். ஜே. யுவக்கிம், அ. மிக்கேற்பிள்ளை ஆகிய இரு அங்கத்தவர்களும் கடந்த வருடங்களிலே மரணத்திரையுள் மறையலாயினர். நாம் இந்த அறிக்கையைத் தயாரிக்கும் இந்த நாட்களில் சகோ. ம. கஸ்பார் காலமாயினார். இவரும் கடமையிற் கரிசனை மிக்க ஒருவர். இவர்களுக்கு அஞ்சலி புரிவதோடு ஆன்மசாந்தியை அருளும்படி இறைவனை இறைஞ்சுகின்றோம். மேற்கூறிய காரணங்களினிமித்தம் ஏற்பட்ட அங்கத்தவ குறையை நிறைவாக்குதற்குப் புதிய அங்கத்தவர்கள் சேரவில்லை. எமது சபையை அடியிட்டவரான சேவைச்செம்மல் பிறெட்றிக் ஓசானம் அவர்களின் கருத்துக்கமைய பிறர்சிநேகத்தைச் செயல்முறையிலே காண்பிப்பதற்கு எம்மவரிற் பலர் தயங்குகின்றனர் என்றே எண்ணவேண்டியிருக்கிறது. அன்புச் சேவையே சிவியமாகவும் அன்பின் பலியே மரணமாகவும் கொண்ட இறைமகன் கிறிஸ்துவின் போதனையையும் சாதனையையும் பின்தொடர ஏனோ தயக்கம். பிறர்சிநேகச் சேவையே திருமறைச் சிவியம் அச்சிவியத்துக்கே மோட்ச சம்பாவனை என்னும் பேருண்மையைச் சிந்தித்து உணர்ந்து தருமச்சேவையில் ஈடுபட்டுழைக்க வருமாறு விசேஷமாய் இளைஞரை அழைக்கின்றோம்: இளைஞரை வழிநடாத்துவோர் திசைகாட்டும்படி வேண்டுகிறோம். காரிய அங்கத்தவர்கள் தொகை அதிகரிக்குமிடத்து நிச்சயமாகவே எமது தரும சேவை பன்மடங்கு விருத்தி பெறும் என்பதை வெகுவிநயமாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

### கையோப்ப அங்கத்தவர்களும் உபகாரிகளும் :

மாதந்தோறும் கிரமமாகத் தருமம் வழங்கிவரும் எமது கையொப்ப அங்கத்தவர்களிடமிருந்து கடந்த வருடத்திலே எண்ணூற்றி அறுபத்திரண்டு ரூபாவும் தருண தருணங்களில் உதாரகுணத்துடன் உதவி புரியும் உபகாரிகளிடமிருந்து ஐஞ்ஞூற்றி எழுபத்தைந்து ரூபாவரையிலும் வரப்பெற்றோம். பிடிஅரிசித் தண்[illegible] சேர்ந்த பணம் ரூபா இருநூறு சதம் ஐம்பது. வழமைப்பிரகாரம் நத்தார் காலத்திலே வறியோருக்கு மேலதிகமான உதவி புரிவதற்காக எமது உபகாரிகளுக்கு விசேஷ வேண்டுகோள் விடுத்தோம். அதன் பயனாக ஆயிரத்தியிருநூற்றி அறுபத்தெட்டு ரூபா சேரலாயிற்று இப்பணத்தைக் கொண்டு ஐம்பத்தைந்து பேருக்கு வஸ்திரமும், பல குடும்பங்களுக்கு விசேஷ பண உதவியும் வழங்கினோம்.

உள்ள நெகிழ்ச்சியுடனும், மலர்ந்த முகத்துடனும் எம்மை வரவேற்று தாராளமாகத் தருமம் அளித்து வருவதினால் அநேக ஏழைகளின் கண்ணீரைத் துடைத்து ஆறுதல் வருவிக்கும் எமது உபகாரிகளுக்கு உள்ளம் நிறைந்த நன்றி பாராட்டுகிறோம். நூறு மடங்கான சம்பாவனையை இறைவனிடம் இறைஞ்சுகிறோம். கூட்டவேளைகளில் இவர்களுக்காக விசேஷ மன்றாட்டம் செய்வது மாத்திரமல்ல எமது தனிச் செபத்திலேயும் இவர்களுக்காக வேண்டுகிறோம். இவர்களுடைய கருத்துகளுக்காகத் தருண தருணங்களில் திருப்பலிப்பூசைகளும் ஒப்புக்கொடுக்கப்படுகின்றன.

### புனிதர் அந்தோனியார் தரும அப்பம் :

வறியோரின் அன்னதாதாவாகிய புனிதர் அந்தோனியாரின் சலுகையாற் பெற்றுக் கொண்ட சகாயங்களுக்கு நன்றியாக அவரின் பக்தர்கள் அனுப்பும் தரும அப்பக் காணிக்கையை மிகுந்த நன்றியுடன் பெற்றுக்கொண்டு அவர்களுக்காகவும் மன்றாடி வருகிறோம். வறியோர் பசிதீர்க்கும் அன்பர்களின் மன்றாட்டங்களைப் பெற்றுக்கொடுப்பதில் புனிதர் அந்தோனியார் எப்போதும் விசேஷ கரிசனையுடையவராயிருக்கிறார் என்பதை அவர் தம் அடியார்களுக்கு மீண்டும் நினைவூட்டுகிறோம்.

—தொடரும்

---

✠

### திரு. யே. அந்தோனிப்பிள்ளை
(றெயில்வே)
நெடுந்துயிலாழ்ந்த
## முதலாண்டு நினைவு
12—6—72

இறைவா! இவன் தன் குற்றங்களுக்கு மன்னிப்படையவும், சம்மனசுகளின் கூட்டத்தோடு சேர்க்கப்படவும் கிருபை கூர்ந்தருளும். எங்கள் ஆண்டவராகிய கிறீஸ்துவின் பெயரால், ஆமென் (ஒரு பர. ஒரு அருள். ஒரு திரி.)

அன்பார்ந்தவர்களே! இவரது ஆன்மசாந்திக்காக 12-6-72 திங்கட்கிழமை காலை 6-15 மணிக்கு யாழ்ப்பாணம் பரி. கொஞ்சேஞ்சிமாதா ஆசனக்கோவிலில் ஒப்புக் கொடுக்கப்படும் துக்கப் பாடற்பூசையில் பங்குபற்றி அவருக்காக வேண்டிக்கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இவர் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், சகோதரர்,
இனசனர்.

---

### நன்றித்துதி

நற்கருணைநாதரின் இரக்கத்தாலும், பரிசுத்த கன்னிமரியம்மாள், புனித சூசையப்பர், வண. வண. பிதா. B. A. தோமாஸ் O. M. I, வண. பிதா. பியோ சுவாமி இவர்களின் மன்றாட்டாலும், எங்கள் மாணவர்கள் சித்தியடைந்ததின் நன்றியாக இதை வெளியிடுகிறேன்.

புனித செபமரிய அன்னையின்
அடிமை.

---

### ஒரு நாச வேலை
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவன் ஒரு பைத்தியக்காரனென்று விசாரித்து அறிய அவனைப் பிடித்த காவற்காரர்கள் அதிகாரிகளிடம் கையளித்திருக்கிறார்கள். இந்த நாசவேலை உலகில் பெரும் கவலையை ஏற்படுத்தியிருக்கின்றது.

---

**கத். வானொலி நிகழ்ச்சி**

**சிறுவர் பகுதி—ஆனி**
தமிழ்ச் சேவை (1)
**ஆனி 14**
நேரம்: மாலை 6-15
நடத்துபவர்: சகோதரி செரபிம், எச். எவ்.
**விடயம் :**
''திவ்வியநற்கருணை வாழ்வின் உணவு''
**பங்குபற்றுபவர்கள் :**
புனித சம்பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள்.

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருஇருதய நாதரின் இரக்கத்தாலும் வியாகுல மாதாவின் வேண்டுதலாலும் நான் கேட்ட மன்றாட்டு கிடைக்கப்பெற்றது. நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன். நன்றி.

யாழ்ப்பாணம். ஏ. ரி.

---

# அருளப்ப பாப்பானவரின் ஜனனபதித் திரு யாத்திரை

திருச்சபையைச் சிலவருடகாலமே ஆட்சிசெய்து உலகப் பிரசித்திபெற்ற 23-ம் அருளப்ப பாப்பானவர் 1963-ம்ஹூ ஆனிமாதம் 3-ந்தேதி பரமபதமடைந்தார். அவர் மரணத்திரையில் மறைந்து இருவருடங்களும், சிலமாதங்களும் சென்றது செல்லாதிருக்கும் போதே அவரிடமாகவந்த ஆறுவது சின்னப்ப பாப்பரசர் கத்தோலிக்க உலகமுழுவதும் பிரமிக்கும்படியாய் எதிர்பாராத ஒரு செய்தியை வெளியிட்லானார். அஃதாவது, தாமும், அகில முழுவதிலுமுள்ள கத்தோலிக்க மக்களும் நம்புவதுபோல அருளப்ப பாப்பானவர் ஒரு புனிதராகப் பிரகடனஞ் செய்வதற்கு வழிபண்ணுவதான விசாரணை ஆரம்பிக்கப்படவிருப்பதாக அறிவித்தார். பிரதாபம் வாய்ந்த ''தேவ தொண்டர்'' ஆன அவருக்குத் திருப்பட்டம் அருளுவதற்கான விசாரணை இன்று வெற்றிகரமாக முன்னேறிக்கொண்டிருக்கின்றது.

இந்தவேளை வடஇத்தாலியிலுள்ள பேர்காமோ நகருக்குச் சமீபமான சொட்டோ இல் மொன்ரே எனப்பெயரிய அவர் பிறந்த சிறுகிராமம் இன்று ஒரு வருடாந்த யாத்திரைத் தலமாகக் காட்சியளிக்கின்றது. ஏனெனில், காலஞ்சென்ற அருளப்ப பாப்பானவர் இங்கேதான் 1881-ம் ஆண்டு பிறந்தார். தமது விடுமுறைகளின் போது ஏறக்குறைய முப்பது ஆண்டுகளாக இங்குதான் அவர் வந்துபோய்க்கொண்டிருந்தார். அவர் மரணமடைந்த முதல் ஆண்டு நிறைவாகிய 1964 ஆனி மாதத்திலே ஒருசில ஆயிரம் மக்களே அவர் சிறுவராய் இருந்தபோது நன்கு அறிந்திருந்த— நேசித்திருந்த இடங்களைத் தரிசிப்பதற்காக அந்தக் கிராமஞ் சென்றிருந்தார்கள். 1965ஆம் ஆண்டு முன்னிலும் அதிகமானோர் சென்றார்கள். ஆனால், சென்ற ஆண்டிலோ மக்களின்கூட்டம் எக்காலத்திலும் பார்க்க மிகஅதிகமாய் இருந்தது.

கோடைகாலத்திலே இந்தக் கிராமத்தின் வீதிகளிலெல்லாம் இத்தாலியில் பேசப்படும் ஒவ்வொரு மொழியையும் கேட்கலாம். சிசிலித்தீவிலிருந்தும், இத்தாலியின் வறிய தென்பகுதியிலுள்ள கிராமங்களின் மாவட்டங்களிலிருந்தும், அருளப்ப பாப்பானவர் கருதினால் அதி மேற்றிராணியாராயிருந்த வெனிஸ் நகரிலிருந்தும், மிலான் நகரின் கைத்தொழில் பிரதேசங்களிலிருந்தும் மக்கள் திரள்திரளாக இக்கிராமத்தைநோக்கிச் சரிந்தபடியே இருக்கிறார்கள். அங்கே அவர் தமது விடுமுறைகளைச் செலவிட்ட ''கா' மெயிற்றினோ''வின் ஊடாக நடமாடுகின்றார்கள். அவர் பிறந்த எளிமையான அறையைக் கண்டுகொள்வதற்காகக் கியூவரிசையிலே பயபக்தியுடன் நிற்கின்றார்கள்.

ஆனால், சொட்டோ இல் மொன்ரேயினும் அந்தக்கிராமத்தில் அதிமிகவாக வசீகரிக்கப்படுகிறவர் அருளப்ப பாப்பானவரின் சகோதரரான சவேரியோ றொங்கலி அவர்களே. சிறுவராயும், இளைஞராயும் இருந்தகாலத்திலே ஆஞ்ஜெலோ றொங்கலி (பாப்பானவர்) யைப்பற்றி அவருக்குள்ள ஞாபகங்களையிட்டு யாத்திரிகர்கள் பேராவலுடன் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் அணைகடந்த பொறுமையுடன் அவர் பதிலளிக்கின்றார். ''அவர் எப்போதுமே அதிகம் நல்லவராயிருந்தார்'' என்று அவர்களுக்கு அவர் சொல்லுகின்றார். ''நல்ல பாப்பானவர்'' என்று பாரம்பரியத்தில் ஏற்கனவே இடம் பெற்றுள்ள அருளப்ப பாப்பானவரை மக்கள் இவ்வாறே ஞாபகப்படுத்திக் கொள்ளுகின்றார்கள்.

---

# இந்திய கத். பத்திரிகை கொள்கைக்காகத் தண்டிக்கப்பட்டது

இந்தியாவில் கிறீஸ்தவர் மத்தியில் பிரபலம் பெற்ற ''சத்திய தீபன்'' என்னும் கத்தோலிக்க பத்திரிகை அதன் கொள்கைக்கு எதிரான ஒரு கருமத்தைச்செய்ய மறுத்தன் காரணமாக தண்டனைக்கு உள்ளாகியிருக்கின்றது. சமீபகாலத்தில் இந்திய அரசாங்கம் கர்ப்பத்தடையை மக்கள் மத்தியில் பரப்புவதற்காக பெருஞ் செலவில் பத்திரிகைகளில் விளம்பரங்கள் செய்து வருகின்றது. அந்நாட்டில் 3000 பிரதிகள் விற்கும் பத்திரிகைகளுக்கு அரசாங்க விளம்பரங்கள் அச்சிடக் கிடைக்கின்றன. இதனால் இப்பத்திரிகைகள் ஓரளவு பணக்கஷ்டத்தைத் தவிர்த்துக் கொள்கின்றன. சத்தியதீபன் 70,000 பிரதிகளை வெளியிடும் வாரப்பத்திரிகை. கர்ப்பத்தடை விளம்பரங்களை வெளிப்படுத்த மறுத்துவிட்டதனால் அரசாங்க விளம்பரங்களினால் வரும் நன்மையும் அதற்குக் கிடைக்கவில்லை.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1972-ம்ஹூ ஆனி மாதம் 10-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது; தந்தி: '' கதலிக் பிறஸ்'' யாழ்ப்பாணம்; தொலைபேசி: 300; தாபிதம்: 1876;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org